முருகப்பெருமான் துணை

**மகான் அநுமான் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.07.2021**, வெள்ளிக்கிழமை

1. தனிப்பெருங் கருணை வடிவாக
தரணியில் அவதரித்த ஞானியே
கனிவேலவன் சக்தியுமாக வந்த
கலியின் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே அநுமான் யானும்
அருளுவேன் துல்லிய ஆசி
வரங்களென பிலவ மிதுனதிங்கள்
வல்லமைபட இருபானை திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் **25**ம் நாள், **09.07.2021** வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அரங்க ஞானியரின்
வழிகாட்டல் பெருமை குறித்து உரைப்பேன்
சோரமின்றி கலியுக மக்கள்
சுபிட்சமும் ஞான பலமும் பெறவேண்டி
4. வேண்டியே சன்மார்க்கம் எனும்
வேதமதை அருளி அழைக்கும்
தொண்டுமிக்க ஞான வழிகளை
தொடர்ந்து ஏற்று மக்கள் வர
5. வருகவே அற்புதம் நிகழும்
வாழும் காலமே குருவருள்
திருவருளாக பெருந்துணை வரும்
தெய்வீக பலம்கூடி வரவர
6. வருகவே மக்களின் தலைமைகள்
வடிவேலன் அருளாசி பெற்ற
தருமபலமிக்க ஞானத் தலைமைகளாக
தரணியெங்கும் அமைந்து நன்கு
7. நன்றான ஞானிகள் ஆட்சியெனும்
ஞான ஆட்சி இனிதே மலரும்
நன்றுதரும் இந்த மாற்றத்தை
நம்பிக்கையுற ஆறுமுக ஞானி
8. ஆறுமுக ஞானி ஆக்கம் தந்து
அன்னதான சேவை துவக்கி
மாறுதல் தந்து மரணமில்லா
மகத்துவம் தரும் அழியாமை அருள
9. அருளுகின்ற இந்த சக்தியுள்
அநுமான் யானும் சிரஞ்சீவித் தன்மையை
அருளாக இறக்கி வரம்தர
அரங்கமகானை தேடி ஆசிபெறும்

10. ஆசிபெறும் உயர் மக்களுக்கு
அநுமான் என் அருட்துணையும்
வாசி வெல்லும்படியான ஞானபலமும்
வல்லமையும் தானாக வந்தடையும்

11. அடையவே அற்புதம் நிகழ்த்தும்
அரங்கனே கலியின் சிறந்த
இடர் வெல்லும் அவதார ஞானி
ஏற்று வர உலகமே மாறும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–